**SRI LANKA EXPORT DEVELOPMENT BOARD**
ශ්‍රී ලංකා අපනයන සංවර්ධන මණ්ඩලය
இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை
EDB SRI LANKA

## கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சு

## இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)

# முன்மொழிவுக் கோரிக்கைக்கான அழைப்பு (RFP)

**இலங்கையின் ICT துறையின் உலகளாவிய தெரிவுநிலையை (Global Visibility) மேம்படுத்துவதற்கு இணையதள மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரத்திற்காக சேவை வழங்குநர் ஒருவரின் பெறுகை – 2026**

**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (EDB)**

**ஒப்பந்த இலக்கம் EDB/PU/NCB/2026/04**

1. 2026 - இலங்கையின் ICT துறையின் உலகளாவிய தெரிவுநிலையை (Global Visibility) மேம்படுத்துவதற்கு இணையதள மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரத்திற்காக நிறுவனம் ஒன்றை தேர்வு செய்வதற்கு கைத்தொழில் மற்றும் தொழில் முயற்சியாண்மை அபிவிருத்தி அமைச்சின் நோக்கெல்லையின் கீழ் இயங்கும் இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) திட்டமிட்டுள்ளது.

2. 2026 - இலங்கையின் ICT துறையின் உலகளாவிய தெரிவுநிலையை (Global Visibility) மேம்படுத்துவதற்கு இணையதள மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரத்திற்காக சேவை வழங்குநர் ஒருவரின் பெறுகைக்கு தகுதி மற்றும் தொழில்முறை சேவை வழங்கும் நிறுவனங்களிடம் இருந்து (விலைமனுதாரர்கள்) இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை (SLEDB) சார்பில், திணைக்கள பெறுகைக் குழு (DPC), தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் தற்போது கோரப்படுகின்றன.

3. 2024 தேசிய பெறுகை வழிகாட்டலில் குறிப்பிடப்பட்ட தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB – ஒற்றைக் கட்டம் இரட்டை கடிதவுறை விலைமனு நடைமுறை) மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும் என்பதோடு வழிகாட்டல்களில் வரையறுக்கப்பட்டவாறு அனைத்து தகுதி பெற்ற விலைமனுதாரர்களுக்கும் திறந்திருக்கும்.

4. ஒப்பந்தம் வழங்குவதற்கான தகுதிக்கு வெற்றிகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும். தகுதிபெற்ற விலைமனுதாரர்களுக்கான தகைமை அளவுகோலில் பின்வருவனவும் அடங்கும். (மேலதிக தகைமை தேவைகள் பெறுகை ஆவணங்களில் தரப்பட்டுள்ளன)

   a) **பொது அனுபவம்**

   சேவை வழங்குநர் குறைந்தது ஓர் (01) ஆண்டு சர்வதேச திட்ட அனுபவம் உட்பட இணையதள மேம்பாடு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் வழங்கலில் குறைந்தது 3 ஆண்டுகள் அனுபவத்தைப் பெற்றிருத்தல் வேண்டும்.

   b) **இதனையொத்த பண்பின் ஒப்பந்தத்தின் பிரத்தியேக அனுபவம்**

   சேவை வழங்குநர் (கடந்த 5 ஆண்டுகளுக்குள்) இணையதள மேம்பாடு, உள்ளடக்க மேம்பாடு, பராமரிப்புக்காக குறைந்தது 2 இதனையொத்த திட்டங்கள் மற்றும் 2 இதனையொத்த டிஜிட்டல் சந்தைப்படுத்தல் திட்டங்களை பெற்றிருத்தல் வேண்டும்.

   c) **நிதித் திறன்**

   சேவை வழங்குநர் குறைந்தது மூன்று (03) ஆண்டுகளுக்காக வர்த்தகப் பதிவு, கணக்காய்வுக்கு உட்படுத்தப்பட்ட நிதி அறிக்கைகளின் சான்றளிக்கப்பட்ட பிரதியை வழங்கல் வேண்டும்.

5. ஆர்வம் கொண்ட தகுதி பெற்ற விலைமனுதாரர்கள் தொலைபேசி: 011-2300702, மின்னஞ்சல்: disna@edb.gov.lk கொழும்பு -02, நவம் மாவத்தை, இல. 42, NDB – EDB கோபுரம், நிலை 06, பெறுகை – உதவிப் பணிப்பாளரிடம் இருந்து மேலதிக விபரங்களை பெறலாம்.

6. பெறுகை ஆவணங்களை https://www.srilankabusiness.com/announcements என்ற SLEDB இணையதளத்தில் இருந்து தரவிறக்கம் செய்ய முடியும். விலைமனு ஆவணங்களின் அச்சிடப்பட்ட பதிப்பை மேலுள்ள 05ஆம் பந்தியில் இருக்கும் முகவரியில் பெற முடியும். தகுதி பெற்ற விலைமனு ஒன்றாக கருதுவதற்கு, மீளளிக்கப்படாத கட்டணமாக 1000.00 இ.ரூபாவை வங்கிக் கணக்கிற்கு செலுத்துதல் வேண்டும். விபரங்கள் விலைமனு ஆவணத்தில் தரப்பட்டிருப்பதோடு கொடுப்பனவு ரசீது/ EDB ரசீதின் அசலை விலைமனுவுடன் இணைத்தல் வேண்டும். இந்த கொடுப்பனவு ரசீது இன்றி சமர்ப்பிக்கப்படும் விலைமனுக்கள் மதிப்பீட்டுக்காக கருத்தில்கொள்ளப்படமாட்டாது. தவிர, விலைமனுவை சமர்ப்பிப்பதற்கு முன்னர் பந்தி 5 இல் வழங்கப்பட்ட மின்னஞ்சல் முகவரிக்கு கொடுப்பனவு ரசீதின் ஸ்கேன் செய்யப்பட்ட பிரதி ஒன்றை மின்னஞ்சல் செய்தல் வேண்டும்.

7. அசல் விலைமனு உறையில் மூடப்பட்டு இடது பக்க மேல் மூலையில் "இலங்கையின் ICT துறையின் உலகளாவிய தெரிவுநிலையை (Global Visibility) மேம்படுத்துவதற்கு இணையதள மறுசீரமைப்பு மற்றும் டிஜிட்டல் சந்தைப்படுத்தல் பிரசாரத்திற்காக சேவை வழங்குநர் ஒருவரின் பெறுகைக்கான விலைமனு – 2026 - "EDB/PU/NCB/2026/04" என்று குறிப்பிடுதல் வேண்டும். விலைமனு சமர்ப்பிப்பவர் பெயர் மற்றும் நிறுவனத்தை உறையில் குறிப்பிடுதல் வேண்டும்.

8. விலைமனுக்களை 2026 செப்டெம்பர் 29 ஆம் திகதி பி.ப. 2.00 அல்லது அதற்கு முன்னர் (மேலுள்ள பந்தி 5 இல் உள்ள) முகவரிக்கு சமர்ப்பித்தல் வேண்டும். தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். 7ஆவது மாடி சிறிய மாநாட்டு அறையில் 2026 செப்டெம்பர் 29 ஆம் திகதி பி.ப. 2.15 இற்கு பங்கேற்க விரும்பும் விலைமனுதாரர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் ஐம்பதாயிரம் இலங்கை ரூபாவுக்கு (இ.ரூபா 50,000.00) குறையாத வங்கி உத்தரவாத வடிவத்தில் விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

9. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு EDB இன் 9ஆவது மாடி சபை அறையில் 2026 செப்டெம்பர் 21 ஆம் திகதி மு.ப. 10.00 இற்கு இடம்பெறும். அனைத்து ஆர்வமுடைய விலைமனுதாரர்களும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் பங்கேற்கலாம்.

**தலைவர் மற்றும் தலைமை நிறைவேற்று அதிகாரி**
**இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை**
**NDB – EDB கோபுரம், இல. 42, நவம் மாவத்தை,**
**கொழும்பு -02**
**இணையதளம்: http://www.srilankabusiness.com**

2026 செப்டெம்பர் 15